# கழகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன்!

# “உடன்பிறப்பே... நீங்கள் சொல்லுங்கள்!.. நான் கேட்கிறேன்!”


## ‘உடன்பிறப்புகளின் குரல்’ வெப்சைட்டைத் தொடங்கிவைத்து - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை,மே16-**

**“உடன்பிறப்பே.. நீங்க சொல்லுங்க.. நான் கேட்கிறேன்”.. என ‘உடன்பிறப்பின் குரல்’ வெப்சைட்டைத் தொடங்கி வைத்து காணொலியில் உரையாற்றுகையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**தி.மு.க. இன்னும் எப்படியெல்லாம் உழைக்க வேண்டும் என கருத்துகளைக் கேட்கிறார் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோவில், “ஆன்லைன் வாயிலாக கருத்துகளைக் கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன், கட்சியின் எல்லா மட்டத்திலும் தேவையான மாற்றங்களைச் செய்யப் போகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.**

**நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க., 59 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை இழந்தது. கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்தார். இந்நிலையில், ‘உடன் பிறப்பின் குரல்’ என்ற பெயரில் கழகத் தொண்டர்களிடம் கருத்துகளைக் கேட்டு ‘வெப்சைட்’ ஒன்றினைத் தொடங்கியுள்ளார், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**






இதுதொடர்பாகப் பேசி காணொலி ஒன்றை ‘எக்ஸ்’ தளத்தில் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள அந்தக் காணொலி வருமாறு:-

“எல்லாருக்கும் வணக்கம். ஒரு சின்ன இடைவெளிக்குப் பிறகு உங்களோடு வீடியோவுல பேசுகிறேன். கடைசியாக, ‘டீலிமிடேஷன்’ (DELIMITATION) பற்றிப் பேசியிருந்தேன். அதைத் தொடர்ந்து தேர்தல் எல்லாம் நடந்து முடிந்திருக்கிறது. முடிவுகளும் வந்து விட்டன.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு என்னவெல்லாம் நடந்தது, என்ன நடக்கிறது என எல்லாவற்றையும் பார்த்துக்கிட்டுதான் இருக்கோம். இரண்டு வாரமாக எல்லா வீடுகளிலேயும் நியூஸ் சேனல்தான் ஓடிக்கிட்டே இருக்கிறது. அந்த அளவுக்கு விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமப் போகிறது.

2026 தேர்தல் முடிவுகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், தி.மு.க. ஒரு பெரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. அதை நாம ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இது நிச்சயமாக நாம எதிர்பார்த்த ‘ரிசல்ட்’ இல்லை. இதற்கு அவர் காரணம், இவர் காரணம் என்று யாரும் யார் மேலயும் பழி போடாதீர்கள். தலைவராக இந்தத் தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். வெற்றி கிடைக்கும் போது எனக்குத்தான் அந்த ‘கிரெடிட்’ வந்து சேருகிறது, அப்போ தோல்வி அடையும்போது அந்தப் பழியை நான்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் ஒரு நல்ல தலைவருக்கான இலக்கணம்.

நாம் தோற்றுவிட்டோம். அதுக்காக அதையே நினைச்சுக்கிட்டு முடங்கிவிட மாட்டேன். உடனே அப்டேட் ஆகி மீண்டு வருவேன். நாம் எல்லாருமே அப்படித்தான் வரவேண்டும். உங்களுடைய ஆலோசனைகள், பரிந்துரைகள், ஐடியாக்கள் எனக்கு வேணும். எலக்சனா இருந்தாலும் கரெக்சனாக இருந்தாலும் உங்ககிட்டதான் வந்தாக வேண்டும். மக்கள்தான் எல்லாம்.

இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு என்ன காரணம்? தி.மு.க. இன்னும் எப்படியெல்லாம் உங்களுக்காக உழைக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களுடைய கருத்துகளை வெளிப்படையாகச் சொல்லுங்கள். அதுக்காகத்தான் இந்த ‘உடன்பிறப்பின் குரல்’ வெப்சைட். இதில் உங்கள் கருத்துகளைப் பதிவிடுவது ரொம்ப சிம்பிள். உங்கள் குரலிலேயே பேசி கருத்துகளைச் சொன்னீர்கள் என்றால் அதுவே டைப் ஆகிடும். நேரடியா நீங்களே டைப் பண்ணியும் சொல்லலாம். இல்லையென்றால், ஒரு பேப்பர்ல எழுதி அந்தப் போட்டோவை அப்லோட் பண்ணலாம், டாக்குமெண்ட்டா அனுப்பலாம்.

உங்கள் கருத்துகள் எனக்கு வந்து சேர்ந்துவிடும். அதையெல்லாம் படித்துப், பரிசீலித்து நாம அடுத்தகட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன். நம்முடைய அணுகுமுறை, சிந்தனை, செயல்பாடு எல்லாவற்றையும் காலத்துக்கு ஏற்ற மாதிரி ‘எவால்வ்’ (EVOLVE) ஆகித்தான் ஆக வேண்டும். உங்களுடைய கருத்துகளின் அடிப்படையில ‘DMK 2.0’ வரும். கட்சியின் எல்லா மட்டத்திலேயும் தேவையான மாற்றங்களைச் செய்யப் போகிறேன்”.

இதனால் அடுத்த நூறு ஆண்டுகளுக்கும் இந்த இயக்கம் உயிர்ப்போடு இயங்கும், உங்களுக்காக இயங்கும். உடன்பிறப்பே... நீங்கள் சொல்லுங்கள்!.. நான் கேட்கிறேன்!”

இவ்வாறு அந்த காணொலியில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியுள்ளார்.

---

### சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என நான் கூறியது

## மேல் சாதி - கீழ் சாதி என மக்களைப் பிரிப்பதை ஒழிக்க வேண்டும் என்பதுதான்!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!

சென்னை, மே 16-

சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் எனப்து கோயிலுக்குப் போகக் கூடாது என்பது அர்த்தம் அல்ல! மேல் சாதி - கீழ் சாதி என மக்களை பிரிப்பதை ஒழிக்க வேண்டும் என்பதற்குத்தான் அப்படித் தெரிவித்தேன் என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:-



**தமிழ்நாடு சட்டப்பேரவையில நான் பேசுனப்ப, ‘‘மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்’’–னு குறிப்பிட்டேன். இதுக்காக என்னை சில பேர்** criticize **பண்றாங்க.**

**இதுக்கெல்லாம் பயப்படுற ஆள் நான் இல்ல. எதிர்ப்புலேயே வளர்ந்தது தான் திராவிட இயக்கம். அந்த வகையில, ஒரு சின்ன விளக்கத்தை மட்டும் கொடுக்க விரும்புறேன்.**

**சனாதனம் ஒழிக்கப்படணும்னு சொன்னா யாரும் கோயிலுக்கு போகக் கூடாதுனு அர்த்தம் இல்ல.**

**கோயில்ல மட்டும் இல்ல,** society**–லயும் எல்லாருக்கும்** equal **உரிமை இருக்கணும்னு அர்த்தம்.**

**மேல் சாதி – கீழ் சாதின்னு மக்களைப் பிரிக்கிறதை தான் நான் ஒழிக்கணும்னு சொன்னேன்.**

**பெரியார் – அம்பேத்கர் – அண்ணா – கலைஞர் பேசின கொள்கைய தான் நானும் பேசினேன்.**

**நாங்க யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் எதிரானவங்க இல்லை. ஆனா,** Inequality**–ஐயும்,** oppression**–ஐயும் கடுமையா எதிர்ப்போம் .**

**‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’–னு வள்ளுவர் சொன்னது தான் எங்க வழி!**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்.

---

## விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*விருதுநகர், மே 16-*

*விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக கூட்டம் நாளை (17.05.2026-ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்/ நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் : 1. நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தல் குறித்து.*



*இவ்வாறு தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கழக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

---

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருமதி பி.கீதா ஜீவன் அறிவிப்பு!

*தூத்துக்குடி, மே 16-*

*தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமையில் 18.05.2026 அன்று மாலை 6 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்ட பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே தூத்துக்குடி வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி துணை செயலாளர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*



*பொருள்:*

*•14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டம் சம்பந்தமாக,*
*•முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் சம்பந்தமாக,*
*•26.05.2026 அன்று மறைந்த மாவட்ட தி.மு. கழக செயலாளர் என். பெரியசாமி அவர்களின் 9வது ஆண்டு நினைவுதினம் தொடர்பாக,*
*•கழக வளர்ச்சி பணிகள் குறித்து*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

## கொள்கையிலே எதிர்நீச்சல்!
## கோட்டையிலே புலிப்பாய்ச்சல்!



முன்னேற்றக் கழகத்தின் வீரனடி!.. எங்கள்
முத்தமிழ் அறிஞரின் பேரனடி!
பன்னாள் இலட்சியப் பயிற்சியடி!.. இதோ!
பாய்ந்தது புலிக்குட்டி!பதினாறடி!

வெல்லும் திறல்கொண்ட சொல்லழுத்தம்!.. முத்து
வேல்கரு ணாநிதிக் கொள்கைரத்தம்!
நெல்லுக்கும் புல்லுக்கும் நேரில்யுத்தம்!.. "உதய
நிதி"க்குநம் தமிழன்னை அன்புமுத்தம்!

நின்று முழங்கிய வீறுணர்ச்சி!..நெஞ்சில்
நேர்மைத் திறம்கொண்ட பேரெழுச்சி!
மன்றில் உரையல்ல! வாள்சுழற்சி!.. அங்கு
மவுனிகள் வேடத்தில் ஆளும்கட்சி!

முஸ்லீம், கிறிஸ்தவர், இந்துக்குடி.. மக்கள்
மூளைக்குள் ளும்,திரை மோகமடி!
"புஷ்பா" திரைப்படச் சாட்டைஅடி!.. அறப்
போரில் இனிஇவன் வேட்டையடி!

பீடு மிகும்இளந் தமிழனடி!.. சட்டப்
பேரவை எதிர்க்கட்சித் தலைவனடி!
சூடும் தமிழ்நிலம் நாளையடி!.. இவன்
தோள்களி லே,புகழ் மாலையடி!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**